<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (3.9.2013) தலைமைச் செயலகத்தில், ஆட்டோ ஓட்டுநர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் மற்றும் நுகர்வோர் அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளும் நேரில் சந்தித்து அனைத்து தரப்பினரும் பாராட்டும் வகையில் ஏற்புடைய ஆட்டோ ரிக்ஷா கட்டண நிர்ணயம் செய்ததற்காக, தங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டில் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கட்டணம் இதற்கு முன்னர் 2007–ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. எரிபொருள் விலை, உதிரி பாகங்கள் விலை, ஆட்டோ ஓட்டுநர்களுக்கான சம்பளம் ஆகியவை பன்மடங்கு உயர்ந்து விட்டதால், தற்போது கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று ஆட்டோ ஓட்டுநர் தொழிற்சங்கங்களும், நுகர்வோர் அமைப்புகளும் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். மேலும், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கட்டணம் நிர்ணயம் செய்வது தொடர்பாக தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், அனைத்து காரணிகளையும் பரிசீலித்து முடிவு எடுக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 22.8.2013 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும், 80 கோடி ரூபாய் செலவில் விலையில்லா மின்னணு இலக்க அச்சடிக்கும் இயந்திரத்துடன் கூடிய மீட்டர் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

பயணிகளின் பாதுகாப்பிற்கு அவசர காலங்களில் பயன்படுத்திடத் தக்க அபாய பொத்தான் ஆட்டோ மீட்டருடன் பொருத்தப்பட வேண்டும் என்றும், கூடுதல் கட்டணம் வசூல் செய்வதை தடுத்திட தீவிர கண்காணிப்போடு, கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மக்கள் புகார் அளிக்க பொதுவான தொலைபேசி எண் வழங்கப்படும் என்பன போன்ற ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்களை பாதுகாத்திடும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த அறிவிப்பு பொதுமக்களிடமும், ஆட்டோ ஓட்டுநர்களிடமும் மிகுந்த வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து, அனைத்து தரப்பு மக்களாலும் பாராட்டப்படும் வகையில் ஆட்டோ ரிக்ஷா கட்டணம் நிர்ணயம் செய்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில், வடசென்னை அண்ணா ஆட்டோ ஓட்டுநர் தொழிற்சங்கத்தின் செயலாளர் திரு ஆர். தேவராஜ், தென் சென்னை அண்ணா ஆட்டோ ஓட்டுநர் தொழிற்சங்கத்தின் செயலாளர் திரு பன்னீர்செல்வம்,

தமிழ்நாடு AITUC ஆட்டோ தொழிலாளர்கள் சம்மேளனத்தின் மாநில பொதுச் செயலாளர் திரு ஜெ. சேஷசயனம், மாநிலத் தலைவர் திரு ஜெ. லட்சுமணன், மாநில துணைச் செயலாளர் திரு பி. மாரியப்பன், மெட்ராஸ் மெட்ரோ ஆட்டோ டிரைவர்ஸ் அசோசியேஷன் துணை பொதுச் செயலாளர் திரு எம். சாமிநாதன், INTUC ஆட்டோ தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் திரு எம்.ஜே. அழகேசன், மாநில செயல் தலைவர் திரு சந்தான கிருஷ்ணன், CITU ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் தலைவர் திரு பா. கருணாநிதி, பொதுச் செயலாளர் திரு ஏ.எல். மனோகரன், துணை பொதுச் செயலாளர் திரு வி. ஜெயகோபால், குட்வில் ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் தலைவர் திரு கே. குமார், பொருளாளர் திரு என். வெங்கடேசன், பாட்டாளி ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு ஆர். சுப்பிரமணியன், ஆட்டோ ஓட்டுநர் பயணிகள் நல்லுறவு சங்க நிறுவன தலைவர் திரு அமெரிக்கை வி. நாராயணன், டாக்டர் அம்பேத்கர் ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு பி. குப்பன், தொழிலாளர் விடுதலை முன்னணி ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு வி. கடம்பன், வடசென்னை ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு எம். ஆனந்தன்;

நுகர்வோர் அமைப்புகளின் சார்பில் CHANGE அமைப்பைச் சேர்ந்த டாக்டர் எஸ். பிரகலாதன், Consumer Association of India அமைப்பைச் சேர்ந்த திரு ராஜன், Pattabiram, Thiruvallur Consumer Protection அமைப்பைச் சேர்ந்த திரு ஆர். என். வரதன், Tamil Nadu Consumer Protection Organisation அமைப்பைச் சேர்ந்த திரு பால் பர்னபாஷ் மற்றும் நுகர்வோர் பிரதிநிதிகளான திருமதி வைஷ்ணவி, திரு பாலச்சந்த், திரு செந்தில்குமார் ஆகியோர் நேரில் சந்தித்து தங்களது நீண்ட நாள் கோரிக்கையினை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சுமூகமான முறையில் நிறைவேற்றித் தந்தமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். **மேலும், ஆட்டோ ஓட்டுநர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை ஒரு முதலமைச்சர் சந்திப்பது இந்தியாவிலேயே இதுவே முதல்முறை என்று தெரிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு ஆட்டோ ஓட்டுநர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.**

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத் துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள் : 3.9.2013